அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

253

மலர் 1 | விரோதிஸ்ரீ—கார்த்திகைமீ
1949ஸ்ரீ நவம்பர்மீ—டிசம்பர்மீ | இதழ் 8



ஸுப்பிரமணியக்கடவுள், தேவர்களுக்குத் திவ்ய நேத்திரத்தைக் கொடுத்து, அனந்த கோடி சூரியர்கள் திரண்டாற்போல வீசி நின்ற தமது பரமேசுவர ரூபத்தைக் காட்டியருளினர். (கந்தபுராணச் சித்திரவிளக்கம்—6)

2½

254

பொருளடக்கம்

			பக்கம்
1.	இருந்தபடி இருங்கோள்	(திருப்புகழ் மணி)	1
2.	குமர குருபரர்	(ரசபதி)	3
3.	இதய மலரே ஈசனுக்கேற்றது	(இராமச்சந்திர அய்யர்)	8
4.	ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்	(V. S. வெங்கடராமன்)	11
5.	தெய்வ நம்பிக்கை	(அ. ராமமூர்த்தி)	14
6.	அன்னை வடிவமடா	(செ. பொ)	18
7.	அநுபூதி முடிவு விழா	(பாலாம்பிகை)	20
8.	ஔவைப் பிராட்டியார்	(ஸ்ரீவத்ஸன்)	24
9.	பன்னிரு திருமுறைகளில் இயற்கை நயங்கள்	(க. சோமசுந்தர செட்டியார்)	28
10.	ஔவைப் பிராட்டியார் (கலைமகளும், திருமகளும்)	(சீதாராம்)	30

நூதன வர்ணப் படங்கள்

சைவ சமயாசாரிய நால்வர் ரூ. 1-0-0

குமர குருபரன் (முருகன்) ரூ. 1-4-0

அமிர்தவசனி காரியாலயம், 54. பந்தர் தெரு., சென்னை

சிறந்த பாராயணப் புத்தகங்களுக்கு

பி. டி. பாணி அண்டு கம்பெனி

17, வெங்கடாசல செட்டி தெரு., திருவல்லிக்கேணி.

அமிர்தவசனி
தெய்வீக மாதப்பத்திரிகை

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

மலர் 1 } விரோதிஸ்ரீ கார்த்திகைமீ 1949 நவம்பர்—டிசம்பர் { இதழ் 8

"இருந்த படி இருங்கோள்"

(திருப்புகழ் மணி)

இருந்தபடியே ஒன்றேனும் இருக்கிறதில்லை. ஜடமும் அப்படியே. மனமும் அப்படியே. கால ஓட்டத்தில் எல்லாம் அகப்பட்டுக் கொண்டிருப்பதால் எல்லா ரூபங்களும் பொருள்களும் அழிந்தும் மாறியுமே வருகின்றன. ஒரு பொருள்தான் எல்லாக் காலங்களிலும் மாறாது தான் இருந்த படியே இருக்கின்றதாம். அது தான் கடவுளாம்—முருகன், உதியாது மரியாது, பிறவாது இறவாது நிற்கும் பொருள். விதிமால் அறியா விமலன் புதல்வன். இருந்தபடி எப்படித்தான் இருப்பது. நாம் முருகனை? அருணகிரி உபதேசிப்பதும் பார்க்கவேண்டும் "தடுங்கோள் மனத்தை; விடுங்கோள் வெகுளியை; தானம் என்றும் இடுங்கோள்; நீவிர் இருந்தபடி இருங்கோள்" என்பர் ஸ்ரீ அருணகிரி. இருந்தபடி இருப்பதற்கு

ஞானச் சித்திச் சித்திர நித்தத் தமிழால்
உன் நாமத்தைக் கற்றுப்புகழ் கைக்குப் புரிவாயே.

வழியென்ன? மன ஓட்டத்தை நிறுத்து. மன ஓட்டம் நின்றுவிட்டால் கால ஓட்டம் நின்று விடும். காலம் மனதைப் பொறுத்தது. சில வேளையில் பத்து நிமிஷங்கள் பத்து மணிகளாகவும், பத்து நாட்கள் பத்து நிமிஷங்களாகவும் செல்லுகிற தன்மையை எல்லோரும் அநுபவித்திருக்கிறீர்கள். உன் சம்பந்தப்பட்ட வரையில் மனதை ஓடாது நிறுத்திவிட்டால், உன்னைப் பற்றியவரையில் காலமும் நின்றுவிடும். காலம் நின்றுவிட்டால் வயதும் நின்ற இடமே நிற்கும். ஓடுகின்ற மனதை நிறுத்துவதற்கு அதை ஏதாவது ஒரு முளையில் கட்டினாலன்றி நில்லாது. ஸ்தாணுவாய், உலகுக்கு எல்லாம் மூலமாய் முளைச்சுடராய் விளங்கும் முருகன் பாதாரவிந்தத்தில் கட்டிவிட்டால் கால உணர்ச்சி நின்று விடும். "காட்டிற் குறத்திபிரான் பதத்தில் கருத்தைப் புகட்டின் வீட்டில் புகுதல் மிக எளிதே" என்றார் அலங்காரத்தில். மற்றும் சொல்வார். "சாடும் தனிவேல் முருகன் சரணத்திலே ஓடும் கருத்தை இருத்த வல்லார்க்கு யுகம் போய் ஜகம் போய்ப் பாடும் கௌரி பவுரி கொண்டாடப் பசுபதி நின்றாடும் போது பரமாய் இருக்கும் அதீதத்திலே', என்றும் உபதேசித்தார் மனதை இவ்வாறு கட்டுவதற்கு சில ஒத்தாசைகள் உண்டு. அவை யென்னவோ? "விடுங்கோள் வெகுளியை!" தன்னை மறந்தவர்க்கு காலம் ஏது? நான் தான் இரண்டும் மாய்ந்து ஒழியப்பெற்றால் மனதை அடியோடு தடுத்து விடலாம். "தானம் என்றும் இடுங்கோள்" "ஈந்தவர் அல்லது இருந்தவர் யாரே" என்றார் கம்பர். தானம் செய்தவர்கள் தான் இருப்பார்கள். இருந்தபடி இருப்பதற்கு நேர்த்தியான வழி. ஆகவே காலனை வென்றால் அன்றி இருந்தபடி இருக்கமுடியாது. நானெனும் உணர்ச்சியையும் மனத்தையும் பற்றியல்லவோ'

உரதி குரு வாக்கியப் பொருளாலே
உனது பத சாக்ஷியைத் தருவாயே.

இருந்தவனை இறந்தவனுக்குகின்றான். இருந்தவன் இருந்தவனாகவே இருந்துவிடில் காலன் என் செய்வான். உள்ள பொருள்களில் பற்றின்றி மிடிதீரத் தான மிட்டுக் கொண்டே மனதை முருகன் சரணத்திலே கட்டி நிறுத்தி அதன் ஓட்டத்தைத் தடுத்துவிட்டால், ஜீவன் இருந்த படியே இருக்கலாம். முருகன்தானே வந்து ஆட்கொள்வான். அந்த நிலை முருகன் வாச ஸ்தலம். இந்த அரும் பெரும் தத்வத்தை ஸ்ரீ அருணகிரியார் கந்தரலங்காரத்தில் "தடுங்கோள் மனத்தை" என்று ஆரம்பமாகும் செய்யுளில் உபதேசித்திருக்கின்றார். கந்தன் தொண்டர் குழாம் அனுபவித்து உண்மை உண்மையென்று கோஷித்து ஆமோதித்த பண்பு. இதுவேதான் அனுபூதி நிலை யென்பர்.

குமர குருபரர்

(ரசபதி)

ஒன்பது கங்கா நதி: ஒன்பது விஷ்ணு பதி. ஒன்பது கைலாஸங்களைத் தன் கரையில் கொண்டது தாம்பிர பரணி யாறு. அந்தப் புனித ஆற்றின் வடகரையில் உளது, ஒன்பது பதிகளுள் ஒன்றான ஸ்ரீ வைகுண்டம். அப்பதியின் வடபால், இரு மையினும் பேறளிக்கும் ஸ்ரீ கைலாசம் இருக்கின்றது.

நேர்மை நிறைந்த வேளாண் மக்கள் நிரம்பியுள ஸ்தலம் அந்த கைலாஸம். அவர்களுள், புகழ்ச்சிக்குரிய தமிழ்ப் புலமையும், முகிழ்ச்சிக்குரிய முருகபக்தியும் முதிர்ந்து இருந்தவர் ஸ்ரீ சண்முக சிகாமணிக் கவிராயர். தெளிந்த கற்பினள் அவர் தேவி. பெயர் சிவகாம சுந்தரி. பிறங்கிய தவத்தின் பயனாக, அவர்கட்கு பிறந்தது ஒரு ஆண் குழந்தை. தம் தவமகனைப் பார்த்துத் தந்தையின்

மட்டுப் படாத மயிலோனே

துக்கத்தில் ஆழ்வது இயல்போதான்.

நெஞ்சம் தழைத்தது. அன்பின் விலாசமான குழந்தை முகம் நோக்கி அகங்களித்தாள் அன்னை. தவழ்ந்து, இருந்து, எழுந்து, தளர் நடைகொள்வதில் வளர்பிறை யென இருந்தது சேயின் வளர்ச்சி. அணிபல அணிந்து, உடைபல உடுத்து நடையில் நயந்து, மைதழை கண்ணேக்கில் மகிழ்ந்த தெனினும், மைந்தன் மழலை கேட்க அவாவியது பெற்ருேர் மனம். குதலைத்தோடு கொஞ்சியும் கெஞ்சியும் எத்துணை கற்பித்தும். மா, பா என்ற அளவன்றிக் குழந்தையிடம் பிறக்க வில்லை. குதலையாண்டு ஐந்தும் ஆயது. ஊமைதானே நம் செல்வன் என உன்னிய பெற்ருேர் ஊகம் உண்மையே ஆயது. இதன்மேல், இடிந்தது பெற்ருேர் இதயம். என்செய்வ தென்றே ஒன்றும் தோன்றவில்லை; திகைப் பூண்டு மிதித்தவர் போலாயினர்.

அஞ்சிய நெஞ்சத்திற்கு ஆறுதல் தருவது ஆறுமுகம் ஆதலின், திருச்செந்தூரானைச் சிந்தித்தது அவர்கள் சித்தம். பெருமான் அருள் புரியின் பேசும் நம் பிள்ளை என்ற துணிவு பிறந்தது. நம்பிக்கை வளர்ந்தது. பிள்ளையைத் தூக்கினர் பிதா. தேவியும் தொடர்ந்தாள்.செந்திலம் பதியைச் சேர்ந்தார்கள்.

க்ஷேத்திர எல்லையில் கால் வைத்ததும் உடல் சிலிர்த்தது. நீராடினர். அநுட்டானங்களை முடித்துக் கொண்டனர். சேயுடன் வீழ்ந்து சேவித்தனர். எழுந்து, கைகுவித்து கும்பிட்டு, ஸ்ரீ வல்லீ தேவ ஸேநாபதி! எமதிறைவ! முருகா! புத்திரப் பேறு இல்லாத குறை முன்னர்; இருந்தும் குறை பின்னர். பிரபோ! உனதருளாடல் அறிபவர்கள் யாரே என்று உள்ளம் உருகி நின்றனர். இது முதல் நாள் செயல்.

ஒரு மண்டலம் வரை உமாசுதனை வழிபடுவது என்று விரதம் கொண்டனர். உப்பில்லா அன்னம் ஒரு வேளை. மற்ற வேளையெல்லாம் திருச்செந்தூர் ஆண்டவன் திருமுன் திருப்புகழ் பஜனை செய்தல்; இது அவர்கள் நியமம். பாராயணத்தில் இடையிடை,

நாவென்று மார்தட்டும் பெருமாளே
மார்தங்கு தாரைத்தந்து அருள்வாயே.

மயில் மழவா! அயில் கிழவா! இருகுயில் குரவா! அருள் தாவா? ஆறுமுகா! ஆறுமுகா!! ஆறுமுகா அ அ அ என்று அலறி யழைத்தனர் அன்னை யத்தர்.

மண்டல அளவில் மழலைமொழி காணேமேல், மகரவாரி தியில் மாள்வம் யாம்! துயர்க்கடலுக் கொரு விடிவு காண்பது இந்த அலைகடலா உனது அருட் கடலா? "தேவ தேவ தேவாதி தேவப் பெருமானே, என்று கதறி நிற்பர். இங்ஙனம் நலத்தொடு பிரார்த்தனை நடந்து வந்தது. நாற்பத்தைந்தாம் நாள் பகல் வழிபாடு, அன்பின் சிகரத்தை அளாவியது. விரதப் பூர்த்தி நாள் நெருங்குகிறதே! குழந்தைக்கு இன்னும் அருளவில்லையே குமரன் என்று நினைந்து பொருமி நைந்தது நெஞ்சம். இவர்கள் கவலையைக் காண மனம் சகியான் போல், கதிரவனும் மேல் கடலில் ஆழ்ந்தான்.

அந்தி நேரம்; திருவாள அருளாயா என்று முணுமுணுத்த படி, சிதைந்த சிந்தையுடன் சந்நிதி சேர்ந்தனர். வீழ்ந்து வணங்கினர், தந்தை தாயர் செய்வதைப் பார்த்துக் கைகுவித்தது சேய்.

முக்கண் கனியே! கனிதரு சுவையே! முத்திக் கொரு வித்தே! தந்திக்கிளையாய்! செந்திலம் பதியாய்! தண்ணொளி பொங்கிய கருணை நிதியே! உனது அருளால் உதித்த இச் சேயின் வாயைப் பேசச் செய்! "கயிலைமலை யனைய செந்தில் பதி வாழ்வே" என்று கதறுகிறார் கவிராயர்.

ஏழை நான்: எஜமான்நீ; எளியன் நான்; இறைவன்நீ; சீவன் யாம்; தெய்வம்நீ! கலியினும் கண்கண்ட அருளிறைவ! தெய்வ முதலே! பிள்ளை முகம் பார்! கும்பிடுதற்குத் தூக்கியகைகளைத் தொங்கவிடான்! உன் அற்புதத் திருவுருவை, கண்களால் இடையறாது காண்கின்றானே! காரணம் தெரியாமல் உளம் நெகிழ்ந்து கண்ணீர் பெருக்கும் இந்தக் கான்முளையை நின் அருட் கண்ணால்

ஏழை தனக்கும் அநுபூதி
ராசி தழைக்க அருள்வாயே.

காண் ! திருச்செந்தூர் ஸ்கந்தஸ்வாமி ! உன்னை வாழ்த்த சேய்க்கு வாய் தா, எம்வரதா என்று, சிலிர்த்த மெய்யினள் சிவகாமி சுந்தரி, காண்பார் மனம் கரையத் தேம்புகிறாள்.

ஹாம் ஹீம் ஹா என்று கர்ஜிக்கிறது ஒரு குரல். ஹா அது என்ன என்று ஓசை வந்ததிசை நோக்கினர் யாவரும். ஹா ஹா நீல மயிலோன் தன் அருட்பெருங் கருணையால் அர்ச்சகர் மீது ஆவேசித்துளன்.

வேல் எடுத்து ஏந்துகிறார் அவ்வேதியர். மணம் கமழ் மாலை ஒன்றை மைந்தன் கழுத்தில் இடுகிறார். தீராத வினையகற்றத் திரு நீறு தூவுகிறார் ; தீர்த்தம் தெளிக்கிறார் ; அதிர்கிறது எவர் மனமும். பார்க்கிறார்கள் வினயமொடு பக்தகோடிகள். கவிராயரும் அவர் தேவியும் கைகுவித்து, அருளுக எம் அத்தா என்று அலறுகிறார்கள். என்ன வியப்பு ! ஆவேசகரை நோக்க அஞ்ச வில்லை யிளஞ் சிறுவர் ! அதிர்ந்தாடும் வேதியர் ஆட்டத்தில், அவர்க்கு மட்டும்யாது புரிந்ததோ? கைதட்டி ஹிஹிஹி என்று சிரிக்கிறார்; செம்மல், வேதியர், சிரிப்பாரை யருள்நோக்கம் செய்கிறார்.

இளஞ்சிறுவர் எதிர்நின்று முன்னும் பின்னும் சாய்ந்தாடும் அர்ச்சகர், பூ! பூ! பூ! என்கிறார். கூர்ந்து நோக்குகிறது குழந்தை. மறுபடியும் பூ ! என்கிறார் பூசுரர். அதை மகிழ்வொடு நோக்கி எதிர் முகமாக, ஊறிய வாயொடு பூ என்கிறார் இளம் புதல்வர். கலகல வென்று நகைத்த அர்ச்சகர் ஆடியாடி, பிள்ளைமுகம் பார்த்து, பூ பா தே நா ஆ என்கிறார். பதிலுக்குப் பதில் பகரும் இளம்பாலர் நாவில் ஞானவாணி நடனமிட, தன்வசம் கெட்டுப் பரவசப் படுகிறார் திடீரென்று அர்ச்சகர் ஆவேசம் அகல்கிறது. பூ பூ பூ பூ பூ பூ "பூமேவு செங்கமலப் புத்தேளும் தேறரிய, பாமேவு தெய்வப் பழமறையும்-தேமேவு, நாதமும் நாதாந்த முடிவும் நவைதீர்ந்த போதமும் காணாத போதமாய்—ஆதிநடு அந்தம் கடந்த நித்தியானந்த போதமாய்ப் பந்தந் தணந்த பரஞ்சுடராய்" என்று தொடர்ந்து

தோகை மயில் வாகனப் பெருமானே
ஆன அநுபூதியைத் தருவாயே.

பாடுகிறார் இளம் பாலர். கோயில் மணி கணகணவென்று ஒலிக்கின்றன. மருளகற்றும் அருளமுதம் பருகிய மூன்று வயதில், காழிப்பதியில் மறை முழக்கம் செய்தார் திருஞானசம்பந்தர். அதே வயதில், வெண்ணெய் நல்லூரில் பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித மெய்கண்டார் சுவேதவனப் பெருமான் என்னும் வரலாறுகளை அறிந்திருக்கும் உலகம். திருச்செந்தூரில் ஐந்து வயதில் பேசாப் பிள்ளை பேசும் அற்புதத்தையும் அநுபவித்தது; வெறும் பேச்சா அது? அருளிறைவனது சொரூப தடத்த லட்சணங்கள், அத்துவாரகசியம் மந்திர நுட்பம், தியானயோகம், ஆகிய பலவாயிரம் செய்திகள், உள்ளம் அள்ளும் எளிய தமிழில், சரள நடையில் அமைந்துள்ளது அப்பாடல்.

இந்த சம்பவம் காண்பார், மனமெலாம் கரைகிறது. பெற்றோர் பரவசம் பேசமுடியுமோ? திருச்செந்தூரா! எங்களப்பனே! அடியவர் எண்ணம் நிறைவுற அருளும் ஆதி மூர்த்தியே என்று ஓயாது விளித்து இன்பக்கண்ணீர் பெருக்குகின்றனர்.

குமரகுருபரனால் உய்ந்த பிள்ளையாரை, குமரகுருபரன் என்றே பேரிட்டுச் சூழ்கிறார்கள் பக்தகோடிகள். பாடுகிறார் குமர குருபரர்; பாடிக் கொண்டேயிருக்கிறார். பாடும் பாட்டோ வரையறை மீறிய பலதொடை யாகிறது. வேதாகம நுட்பமெலாம் அப்பாட்டில் வெளியாகிறது: என்ன வியப்பு?

பாவலர் காவலர் அரும் பெரும் தவசிகள் அளவிலர் கூடி, அந்த அருந்தமிழின்பைச் செவி மாந்தலாயினர்.

அடுத்த இதழிலிருந்து அப்பாடலிலும், பாடல் பொருளிலும் சிறிது உறவு கொளத்தூண்டுகிறார் பிரமஸ்ரீ முத்துசாமி ஐயர் அவர்கள். வாழி அப்பேரன்பர் வழி.

முத்தமிழை யோதித் தளராதே
முத்தியடி யேனுக்கு அருள்வாயே.

இதய மலரே ஈசனுக் கேற்றது

(என். எஸ். இராமச்சந்திர ஐயர் - ஸ்கந்த நிகேதனம்)

அன்பு மேலீட்டினால் அடியார்கள் அவரவர் அகத்திற் கிசைந்த வழிபடு கடவுளைப் பற்பல வழிகளில் வழிபட்டு வருகின்றனர். பெரும்பான்மையோர் தம் தம் இல்லங் களிலேயே பூஜையறை யொன்றை ஏற்படுத்திக்கொண்டு அன்றாடம் ஆண்டவனுக்கு ஷோடசோபசார பூஜை முதலியன விமரிசையாய்ப் புரிந்து வருகின்றனர். சிலர் திருப்பதிகள் தோறும் சென்று தேவனைத் தரிசித்து, அடியவரை வணங்கி, பணி விடைகளையாற்றி, நேர்தல் களைச் செலுத்தி, மகிழ்ச்சியுற்றுத் திரும்புகின்றனர். இன்னும் சிலர் பல ஊர்களுக்குச் சென்று செல்வந்தரை அணுகித் தாங்கள் தங்கள் இல்லங்களில் விசேஷ உற்ச வங்கள் கொண்டாடப் போவதாகவும், அவ்வமயம் இலக்ஷார்ச்சனை, ருத்ராபிஷேகம், உபநிஷத் பாராயணம், பஜனை, ஸத்கதா காலக்ஷேபம், அன்னதானம் முதலியன நடத்தப்போவதாகவுங் கூறிப் பணம் பொருள் முதலியன திரட்டி இஷ்ட கைங்கர்யங்களை நடத்தியும் வருகின்றனர்.

இத்தகைய வழிபாடுகளையெல்லாம் ஒருவர் குறை வின்றிச் சரிவர ஆற்றிவருவதற்குச் செல்வம் ஓர் இன்றி யமையாக் கருவியாக இருந்து வருகின்றது. குறைந்த வருவாயை உடையவர்கள் குடும்ப வாழ்க்கைக்காக ஏற் படும் செலவுகளையே சமாளிக்க முடியாமல் தத்தளிக்கும் போது பூஜைக்குரிய உபகரணங்களைத் தயார் செய்வ தில் மிகுந்த சிரமத்தையடைய நேருவது இயல்பு. பலர் வெளிப்படைப் பூஜையைக் கைவிடவேண்டிய நிலைமையை யடைந்துவிடுவர். க்ஷேத்திராடனம் செய்து அங்கு

திருப் பொற்பாதத் தநுபூதி
சிறக்கப் பாலித்து அருள்வாயே.

நடத்தவேண்டுமெனக் கோரிக்கொண்ட விஷயங்களை நடத்த இயலாமற் போவர்.

பிறரிடம் சென்று யாசித்துப் பொருளீட்டும் விஷயத்தில் ஏற்படும் மனக்கசப்பு அநுபவித்தவர்களுக்கே நன்கு புலனாகும். தனவந்தர் மனைதோறும் சென்று தருணம் பார்த்து இதம் பேசித் திருப்பணிக்குத் திரவியம் வேண்டுமெனக் கேட்கும்போது பல சந்தர்ப்பங்களில் அவர்களது கோபத்திற்கும் வசைமொழிக்கும் கூட ஆளாகவேண்டி வரும். சிலர் வெடுக்கென இல்லையென்று இயம்புவதோடு நில்லாமல் நாத்திகம் பேசவும் கேட்பவருக்குத் தங்கள் திருவுளத்திற்கு தோன்றியவா றெல்லாம் புத்திமதி புகட்டவும் துணிந்து விடுவர். அநேகர் செல்வாக்குடைய நண்பர்களின் சிபாரிசை நாடியே இப்பேர்ப் பட்ட கைங்கர்யங்களுக்குப் பணம் திரட்டுகின்றனர்.

இவற்றையெல்லாம் உற்று நோக்கும்போது செல்வத்தின் துணையின்றித் தெய்வத்தின் திருவருள் சித்தியாது என்ற ஒரு தவறான கொள்கைக்குப் பலர் வரக் கூடும். ஆனால் இது உண்மையல்ல. இல்லார்க்கும் உள்ளார்க்கும் இன்னருள் செய்யும் ஈசன், பொருளை முன்னிட்டா தனது அருளை வழங்குவன்? வேண்டுதல் வேண்டாமையிலான் பணத்தை ஆதாரமாகக் கொண்டு அருள் வழங்கவே மாட்டான். திருவருள் கூட்டுவிக்க வித்தம் பிரதானமல்ல. சித்தமே முதற் காரணமாகும். அருட்பொழிவு ஒருவரின் சித்த விருத்தியைப் பொறுத்தது.

ஸ்ரீ ஜகத்குரு பகவத் பாதாள் தமது சிவானந்த லஹரியில் கூறியிருப்பதைக் கூர்ந்து கவனிப்போம்:

ஆவியுறை கூட்டில் ஞானமறை பூட்டி
யான நிலை காட்டி அருள்வாயே.

" ஆழிய மடுவை மனித சஞ்சாரம்
அற்ற வெவ் வனத்தை நீள் மலையைச்
சூழுவர் மலர்கள் துருவியே ஒன்றாய்த்
துலங்குதம் இதயதா மரையை
ஊழதை ஒழிக்கும் உமையவள் நாத
உனக்களித் தொருகவல் இன்றி
வாழிதிற் சுகமாய் வாழ்ந்திடு வழியை
மாந்தரேன் ஓர்ந்திலர் அந்தோ! "

ஓ உமையவள் நாதா! மனிதர்கள் தங்கள் வசமுள்ள இதயமாகிய தாமரை மலரொன்றினையே உனக்கன்புடன் அர்ப்பணம் செய்து இவ்வாழ்விலேயே பேரின்ப வாழ்க்கையைப் பெற்றுய்யத்தெரியா திருப்பது ஏனோ? அந்தோ! புஷ்பங்களைத் தேடிக்கொண்டு ஆழமான ஏரிகளையும், மனித சஞ்சாரமற்ற பயங்கரமான வனாந்தரங்களையும் பெரும் மலைகளையும் வீணிலே சுற்றித் திரிகின்றனரே!

இவ்வரிய செய்யுள் எவ்வளவு மேம்பாடுடைய ஒரு கருத்தை வெளியிடுகின்றது. ஏழ்மையில் ஆழ்ந்த மெய்யன்பர்கட்கு எத்துணை ஆறுதலை அளிக்கின்றது! ஆகையால், பரமனுக்குப் பணிவிடைகள் நடத்தப் பணமில்லையே என்று பக்தர்கள் பரிதவிக்க வேண்டாம். திருப்பதிகள் தோறுஞ் சென்று பரமனைத் தெரிசித்து வரத் திரவியம் இல்லையே என்று தியங்கவேண்டாம். ஆடம்பரமான விதத்தில் ஆண்டவனுக்கு வழிபாடுகளை யாற்றி அடியார்க்கு இனிய விருந்தளிக்கப் போதிய ஆக்கமில்லையே என்று அங்கலாய்க்க வேண்டாம். வாலறிவன் திருவருளை எளிதில் பெற மெய்யன்பார்ந்த மனத்தாமரையை அவன் மாணடியிற் சேர்த்துவோம். இதய மலரே ஈசனுக்கு ஏற்ற புஷ்பம். அவன் திருப்புகழைக் கண்களில்

நற் பசுபத தேவர் மெய்ப் பெருமானே
சொற்கமல வாழ்வு சற்று அருள்வாயே.

நீர்ததும்ப உடல் புளகாங்கிதமுறப் பாடி அவன் சேவடியை இதய மலரால் அர்ச்சிப்போம். சதா அவன் புகழைச் சாற்றுவோம்.

> "இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
> பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு."

ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்:

7-ஆம் பை (அருந்தளிர் பட அச்சு முறிந்தது)

(V. S. வெங்கடராமன்)

ஜகன்மோகனன் கண்ணன், அவதரித்து ஐந்து மாதங்களாயின-ஆறுமாதத்திய ஜன்ம நக்ஷத்திரம் அன்று. குதூகலித்துக்கொண்ட கொண்டாட்டம். திருமஞ்சனம், ஆயுஷ்ய ஹோமம், அந்தணர் முதல் அனைவர்க்கும் விருந்து முதலாயின நடைபெற்றன. பெரிய வண்டியின் அடியில் கட்டியிருந்த தொட்டிலில் கண் வளர்ந்த கண்ணனைத் துயில விடுத்து வந்தவரையெல்லாம் வரவேற்பதில் யசோதை ஈடுபட்டிருந்தாள். இரண்டு முகூர்த்தம் அறிதுயில் கொண்டார். பசியெடுத்தவர் போல் பாலுண்ண அழுது கொண்டே கால்களால் உதைத்தார். சடபட சடபடா சத்தமே காதில் விழுந்தது. அனைவரும் ஓடி வந்தார்கள், பார்த்தார்கள். அச்சு மரத்தின் பக்கத்தில் நான் அச்சாணி என்பது போல் அச்சுதன் அமர்ந்திருந்தான். தூங்கிய குழந்தைக் கண்ணனைக் காத்துவந்த சிறுவர், "குழந்தையின் காற் பெருவிரல் கொழுந்து பட்டது. இப்படிக் குடை சாய்ந்தது வண்டி" என்றனர். சிறுவர் வார்த்தைகளை அவர் நம்பவில்லை. கண்ணனது அளவிலா ஆற்றல் கண்டு

விசையான தோகை தங்க மயிலேறி யோடிவந்து
வெளிஞான வீடுதந்து அருள்வாயே.

கொள்ளப் பக்குவம் அவர்க்கு அப்போதில்லை. கிரக பீடைகட்குச் சாந்தி செய்யப்பட்டது. யசோதே! குழந்தையின் காலில் காயம் பட்டிருக்கிறதா? என்ருள் ஒருத்தி. கைகளில் புண் பட்டிருக்குமோ பாரம்மா என்ருள் மற்ருெருத்தி. அதற்குள்ளாக நந்தகோபர், குழந்தையை வாங்கித் தழுவிக்கொண்டு பெருமாள் என் கண்ணைக் காப்பாற்றினர் என்ருர். அங்கு வந்து விசாரித்த மற்றவர் மூக்கில் விரல் வைத்துத் திகைத்து நின்றனர்.

இரண்டாங் காசு

மேருவுக்கும் மேரு, காற்றுக்குங் காற்று

கண்ணனுக்கு முதலாண்டு நிறைவு விழா நடந்தது அன்று. வழக்கம்போல யசோதை கண்ணனை மடியில் வைத்துக்கொண்டிருந்தாள். மடி கடுத்து வலியெடுத்தது. கீழே குழந்தையை அமர்த்தினுள். அதற்குள் வேறு வேலைகளைக் கவனிக்க யசோதை சென்ருள்.

வந்ததே பார்க்கவேண்டும். ஒரு குருவளிச் சுழல் காற்று அடித்தது. கோகுல முழுதும் வானளாவ நெருக்கமான புழுதி வாரி அடிக்கிறது. கண்களோ தெரியவில்லை. இரண்டு நாழிகை நேரம் பட்டப்பகலில் புழுதியிருள் கவிந்திருந்தது. குழந்தை நினைவோடு அமர்த்திய இடத்திற்கு யசோசதை வந்து பார்த்தாள். குழந்தையைக்காணவில்லை. ஓவென் றழுதாள். ஓய்ந்தது காற்று. அனைவரும் அழுதார்கள். அப்போது அந்தரத்திலிருந்து ஓர் அசுர பூத சரீரமும், அவ்வசுரன் குரல் வளையை இறுகப்பிடித்த பிடியோடு மார்பில் அமர்ந்த வண்ணமாகத் தங்குழந்தையும் வரக்கண்டனர். அசுரன்

குறவர் பச்சைமானுக்கு இனிய பெருமானே
சிறிது சித்ர பாதக்கமலம் அருள்வாயே.

சரீரம் கீழே விழுந்தது. குழந்தையை வாரியெடுத்தனர். நாம் செய்த புண்ணியம் குழந்தை பிழைத்தது என்றார் சில மாதர். அந்த அசுரன் திருணாவர்த்தன் என்பவன். கம்சனால் வந்தான். காற்றாய் வந்து காற்றையே விட்டான். கல்மாரி பொழிந்து கற்பாறையிலேயே அவ்வசுரன் உயிர்விட்டான். கோகுலமே வியந்தது. "திரும்பவும் இப்படிப்பட்ட ஆபத்து வந்தால் நாம் என்ன செய்வோம். பிராணதார்த்திஹர நாராயணன் நம் குழந்தையின் ஆபத்துக்களை நீக்கிக் காப்பாற்ற வேண்டுமென்று" அக்குழந்தையின் பெற்றோர்களால் அக்குழந்தையே வேண்டிக் கொள்ளப்பட்டது. நந்தகோபர் இவற்றையெல்லாங் கண்டு வசுதேவர் சொன்னவற்றைப் பாராட்டினார்.

மூன்றாங் காசு

உலக மத்தனையும் ஒரு வாயுளே

சகடாசுரன் வண்டியாகிக் காலுதைபட்டு மடிந்தான். திருணாவர்த்தாசுரன், கைகளால் பிசையப்பட்டு ரொட்டி தட்டப்பட்டான். இரண்டும் நிறைவேறவே கண்ணன், முழந்தாள்களாலும் கைகளாலும் இங்குமங்கும் ஓடி அனைவரையும் மயக்கினான். ஒரு காலையும் ஒரு கையையும், தரையில் படியவைத்துத் தாய் தந்த வெண்ணெயை மற்றொரு கையில் வைத்துக்கொண்டு "உலகில் உயர்ந்ததை நுகர்பவன் யானே" என்று சொல்பவன் போல் உண்டு மயக்கினான்! என்னே அவ்வியானை நடை! என்னே கொஞ்சும் அம்மழலை! என்னே அக்கருணை தவழ்பார்வை! என்னே அப்புன்னகை யழகு. இவற்றி லெல்லாம் ஈடுபட்டிருந்த அந்த யசோதை கண்ணனை மடியிலிருத்திப் பால் கொடுத்துக் குடித்தானதும் எதிரி

வியாகுலம் விடு விடென்று கைக்கூர் வேலையேவிய இளையோனே
நின் கழற் சீர்பாத ஞானினி மறவேனே.

விருத்திக் கன்னங்கிள்ளி முத்தமிட்டு முகம் பார்த்துக் கொஞ்சிக்கொண்டிருந்தனள். கண்ணன் அச்சமயங் கண்டு ஒரு கொட்டாவி விட்டு ஒரு மோகனச்சிரிப்புச் சிரித்து நின்றான். அவ்வளவுதான். அக்கண்ணன் வாயில் யசோதை அனைத்தையுங் கண்டாள். வானமும் வானவர் நாடும், பூவுலகமும், விண்மீன்களும், சூரிய சந்திராக்கினிகளும், வாயு சமுத்திரங்களும், தீவு, மலை, நதி, வனம், அங்கெல்லாமிருக்கும் உயிர்கள் முதலாயின வும் காணப்பட்டன. தன் பிள்ளைதான். தன் குழந்தை யின் வாயில் உலகமே காணப்பட்டதும், ஒரு பால் நடுக்க மும், ஒரு பால் வியப்பும் ஆகக் கொண்டனள்.

குறிப்பு :— இப்படியாகச் சகடாசுரவதமும். திருணா வர்த்தாசுரவதமும், முதல் தடவையாக யசோதை கண்ட விசுவரூப தரிசனமும், ஸ்ரீ நாதனுடைய திருவிளையாடல் மின்னல் களாயின.

தெய்வ நம்பிக்கை

(அ. ராமமூர்த்தி)

நாம் ஒரு காரியாலயத்தில் வேலை செய்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது நாம் எவ்வாறு நடந்து கொள்ளுகிறோம்? மேலதிகாரியின் அதிருப்திக்கு ஆளாகாத படி நமது வேலையை ஒழுங்காகவும் கட்டுப் பாடாகவும் ஒரு இயந்திரம் போல் செய்து வருகிறோம். நம்முடைய வேலைத் திறமையை அவர் அறிந்து போற்ற வேண்டும் என்பதற்காக அடிக்கடி அவர் பார்வையை நம் மீது திருப்ப முயல்கிறோம். உத்தியோகத்தில் உயர்வு பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் ஓயாது உழைக்கிறோம். அத்துறையில் நமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்

திருவருட் கருணைப் பிரவையாலே
திரமெனக் கதியைப் பெறுவேனோ.

தையும் நன்கு பயன்படுத்திக்கொள்ள என்னுகிறோம். வேலையில் தவறு ஏற்படும்போது நாமே வருந்துவதுடன் கூட அதிகாரிக்கு அது தெரிந்துவிட்டால் என்ன ஆகுமோ என்று பயப்படுகிறோம்.

"நமக்கு மேலே ஒரு யஜமான் இருக்கிறான். அவனுக்கு நாம் எப்பொழுதும் பதில் சொல்லியாக வேண்டும்" என்ற எண்ணமே நம்மை சிந்திக்கவும் செயலாற்றவும், தூண்டுகிறது. நிதானத்தையும், நம்பிக்கையையும் உண்டுபண்ணுகிறது. ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலை நிறுத்துகிறது,

தெய்வ நம்பிக்கையும் இத்தகையதே! "கடவுள் ஒருவர் இருக்கிறார். நாம் அவரது ஆட்சிக்கு உட்பட்டிருக்கிறோம். நமது சிந்தனைகள், செயல்கள் எல்லாம் அவருக்குத் தெரியும். அவனன்றி ஓரணுவும் அசையாது" என்ற நம்பிக்கை முதலில் நமக்கு ஏற்படவேண்டும். இந்த நம்பிக்கை சாதாரணமாக இறைவன்பால் நமக்கு ஒரு பய பக்தியை உண்டு பண்ணுகிறது. இந்த பயம் தவறுதல் செய்வதிலிருந்து நம்மைக் காப்பாற்றுகிறது. நமக்குள் ஒரு ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் வளர்க்கிறது. நமது ஒழுக்கம் உயர்வதற்கு ஒரு காரண மாகிறது.

"இறைவனது அதிருப்திக்கு நாம் ஆளாகாமல் இருக்கவேண்டும்" என்று நாம் நினைக்கும்பொழுது நமது மனச்சாட்சியின் ஸ்வரூபத்தை நாம் உணருகிறோம். நமது எண்ணத்தில் அழுக்கடையும் பொழுது மனச்சாட்சி நம்மைக் குத்திக் காட்டுகிறது'

மனச்சாட்சிக்கும் நமக்கும் போராட்டம் ஏற்படும் பொழுதுதான் நமது சிந்தனை சக்தி இறைவன் பால் சரி

பதிபாவனை யுற்று அநுபூதியில்
அப்படியே யடைவித் தருள்வாயே.

யான வழியில் திரும்புகிறது. நம்மீது அவன் பார்வையைத் திருப்பவேண்டும் என்ற பேரவா ஏற்படுகிறது.

இறைவனது அருட்பார்வையானது நம்மீது திரும்ப வேண்டுமானால் நாமும் அவனை நெருங்கவேண்டுமல்லவா? நம்முள் இறைத்தன்மை வளர்ந்தா லல்லது நாம் எவ்வாறு அவனை அணுக முடியும்? — இதற்கும் தெய்வ நம்பிக்கைதான் வழி காட்டும்.

எப்படி ஒரு மேலதிகாரியை நினைவில் வைத்துக் கொண்டு அந்த அடிப்படையில் நமது வேலைகளை கட்டுப் பாடாக செய்து வருகிறோமோ அதைப்போல கடவுளை நமது மேலதிகாரியாக ஸ்வீகரித்துக் கொண்டு அந்த நம்பிக்கையுடன் நமது அன்றாட வாழ்க்கையை நடத்தவேண்டும். அப்பொழுதுதான் நமது வாழ்க்கையில் சாதாரணமாகவே ஒரு ஒழுங்கு ஏற்பட்டுவிடும்.

திறமையாக வேலை செய்து மேலதிகாரியின் தயவைச் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உழைக்கும் பொழுது நமக்கு ஒரு பொறுப்புணர்ச்சி உண்டாகிறது. நமது கடமையிலிருந்து வழுவாத படி இந்த உணர்வு நம்மைக் காப்பாற்றுகிறது. இதன் காரணமாக உழைப்புத் தன்மை அதிகரிக்கிறது.

"எல்லாம் அவன் செயல்" என்று நாம் நிச்சயமாக உணரும்பொழுது நமக்கு எதுவுமே ஒரு சுமையாகப் படுவதில்லை. துன்பங்களைக் கண்டு மனம் கலங்குவதில்லை. வாழ்க்கையையே துச்சமென மதித்து மனஉறுதி பெறுகிறோம்.

தவறு செய்துவிட்டதை உணரும்பொழுது மனிதனுக்கு தன்மீதே ஒரு அனுதாபம் ஏற்படவேண்டும். தன்

மனதாசை மாசினையறுத்து ஞானமுதளித்த
வாரமினி நித்த மறவேனே

னுடைய தவறுகளைப் பிறர் நியாயமாக எடுத்துக்காட்டும் பொழுது தைரியமாக ஒப்புக்கொள்ள வேண்டும். தெய்வ நம்பிக்கையுள்ளவனுக்குத்தான் இந்தத் தைரியம் தீவிர மாக இருக்கும்.

ஒழுக்கம் மனிதனுக்கு விழுப்பத்தைத் தருகிறது. சாதாரண மனிதனைவிட தெய்வ நம்பிக்கையுள்ளவன் தனது ஒழுக்கத்தில் விசேஷ கவனம் செலுத்துவான். அவ னுடைய செயல்கள் தார்மீக அடிப்படையில் அமையும். சுயநலம் அவனை விட்டகலும். தன்செயலில் இறைத்தன்மை படிந்திருக்கிறதா? என்று அவன் சிந்தித்த பிறகே செய லாற்றுவான். நாளடைவில் சமூகத்திற்கே ஒரு ஆதார புருஷனாகவும் விளங்குவான்.

தெய்வ நம்பிக்கையில்லாத செயல்கள் யாவும் விசேஷ மாக சுயநல அடிப்படையிலேயே இருக்கும்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுகிறார் :—"முதலில் ஒன்று என் னும் இலக்கத்தைப் போட்டுவிட்டுப், பின்னர் அத்துடன் எத்தனை பூஜ்யங்களைச் சேர்த்த போதிலும் அந்த எண் ணின் மதிப்பு உயர்ந்து கொண்டே போகும். அதைப் போல ஒன்று என்ற கடவுளைத் தெரிந்துகொள். பின்னர் எல்லாம் தாமே வரும்.''— இந்தப் பொன்மொழியை நன்கு உள்ளுணர்வோடு சிந்திக்க வேண்டும். தானே உண்மை புரியும்.

நாம் வசிக்கும் இவ்வுலகம்-இதில் உள்ள கணக்கில் அடங்காத ஜீவராசிகள் - கண்ணுக்குத் தெரியாத - புலன் களுக்கு மட்டுப்படாத - சூட்சும சக்திகள் - இயற்கையின் அற்புத எழில் - நாளுக்கு நாள் புதிது புதிதாக முளைத்து வரும் விஞ்ஞான அதிசயங்கள் இவைகள் எல்லாவற்றை

செஞ்சொல் சேர் சித்தத் தமிழால்
உன் செம் பொனுர்வத்தைப் பெறவேனே.

யும் பார்க்கும்பொழுது - இந்த அற்புத உலகின் சிருஷ்டி கர்த்தா யாராயிருக்கக்கூடும் என்று திறந்த மனத்துடன் சிந்திக்கும்பொழுது, எந்த மனிதனுக்காவது தெய்வ நம்பிக்கை ஏற்படாமலிருக்க முடியுமா?

பரம நாஸ்திகனுக்கும் தெய்வ நம்பிக்கையுண்டு. நாம் கடவுள் என்கிறோம். அவன் அதே சக்தியை தனக்குப் பிரியமான விதத்தில் வர்ணிக்கிறான். இதுதான் வித்தியாசம்.

திறந்த மனத்துடன் ஆழ்ந்து சிந்தியுங்கள். ஆர்வம் காட்டுங்கள்! இறைவன் நமக்கு அருகிலேயே - ஏன்? நம் முன்னேயே இருப்பதைக் காண்பீர்கள்!

அன்னை வடிவமடா!

(செ. பொ. புவனகிரி)

"அடர் பசும் நந்தவனத்திலே ஓடி ஆடி விளையாடும் வேல்விழி மங்கையைப் பார்த்தாயா! தம்பி!"

"பெண்ணியல் பணைத்தும் கொண்ட பேதையாளைக் கண்டு மதிவெட்கி வானடைய, தாமரையாம் இனியமுகம் நெருங்கி நிற்க, அது கண்டு சீறுகிறாளே!"

"ஆகா! அன்னங்கள் அவள் பொலிவைக் கண்டு ஓடுகின்றன! தாமரைகள் கவிழ்ந்து கொண்டன. ஐயோ! மெல்லியலாள் தண்ணீரில் விழுந்து விட்டாளடா!"

"என்ன!....! காரிகையாம் மெல்லியலாள் விழுந்து விட்டாளா! அவள் பொன் கரம் தொட்டு தண்ணீரின் நின்றும் மீட்டால்....!"

வந்து ஞானப் பொருளில் ஒன்று போதித்து
உனது மந்சுதாளைத் இ... அருள்வாயே.

" நன்று! நன்று! அன்னங்கள் பறந்தோட, தாமரை குவிந்து நிற்க, அணங்கினைக் காணவில்லையே.......!

" அன்னப் பேடு படும் பாட்டைப் பார்த்தாயா?

" தாமரை போலும் முக முடையாள் தன்னுருக் காண ஒல்லுமோ?"

" இல்லையண்ணா! வான் மதியம் வெருண்டோட, வாவிநீர்த் தாமரையும் வெருண்ட தென்றால்,....அவள் திருமுகம் இனிய முகந்தான்."

" கரையேறிய கருங் கூந்தலாள் தன் சிற்றிடையைக் கண்டால் உரல் நினைப்பு வருகிற தண்ணா!

" பேதை! அறியாது பேசினாய்! துடியிடை தான் மனத்திரையில் தோன்றி மின்னுதடா! அதோ நம்மை நோக்கியே வருகிறாள்!

" நல்ல சமயமண்ணா! இதை நழுவ விடலாமா? அந்த அழகினைக் காண என்னால் முடியவில்லை யண்ணா!"

" ஆகா! அன்னை வடிவமடா! அவள் ஆதிபராசக்தி தேவியடா! அவள் இன்னருள் வேண்டுமடா! பின்னர் யாவும் வசப்பட்டுப் போகுமடா! இவ்வுலகில்"

" என்ன அண்ணா! அன்னை என்கிறாய்?"

" அருந்தவக் கடவுளாம் அன்னையடா அவள்!"

" தெள்ளத் தெளிந்த தண்ணா! அவள் ஆதிபராசக்தி தேவியே தான் அண்ணா! வா! அண்ணா!! வணங்கி நிற்போம்."

(முதலில் இரண்டு புலவர்கள் இயற்கை இன்பத்தை அனுபவித்து அவர்கள் பேசும் பேச்சும் இது.)

மங்கா நற்பொருள் இந்தா வற்புதம்
என்றே யிப்படி அருள் வாயே.

அநுபூதி முடிவு விழா

(பாலாம்பிகை)

நேற்றுத்தான் கந்தசாமி கோயில் மெத்தை மண்டபத்தில் கந்தர் அநுபூதி விளக்கம் ஆரம்பித்தாற்போலிருக்கிறது. இதற்குள் ஐம்பத்தெட்டு வாரங்கள் ஓடிவிட்டனவே? நாளைக்கு அநுபூதி முடிவுக்கொண்டாட்டமாம். காலை $7\frac{1}{2}$ மணிக்கே, அடியார் கூட்டம், கந்தசாமி கோயிலிலிருந்து புறப்பட்டு பஜனையுடன் வீதிவலம் வரப்போகிறதாம் என்று கேள்விப்பட்டேன்.

திருப்புகழ் மணி

இரவு முழுதும் உறக்கம் கொள்ளவில்லை. மணிகளை எண்ணியபடியே, படுத்திருந்தேன். விடிந்ததும் குளித்து, உடுத்திக்கொண்டு $6\frac{1}{2}$ மணிக்கே கோயிலுக்குச் சென்றுவிட்டேன். உற்சவ மூர்த்தியின், முன்னுலுள்ள மண்டபத்தில், அருணகிரி நாதர் படம், அலங்கரித்து, யானை வாகனத்தின் மேல் வைக்கப்பட்டிருந்தது. அங்கு ஆண்களும் பெண்களுமாகப் பல அடியார்கள் உட்கார்ந்து, முருகா முருகாவென்று உருகிப் பாடிக்கொண்டிருந்தனர்.

சரியாய் $7\frac{1}{2}$ மணியிருக்கும். வாயிலில், மோட்டார் ஹாரனின் சத்தம். அதைக்கேட்ட அடியார்களிடையில், மனவெழுச்சியும் பரபரப்பும் உண்டாயின. அதோ வந்துவிட்டார், என்று ஒரு குரல் கேட்டது. திருப்புகழ் மணியவர்கள் வந்து கொண்டிருந்தார்.

உனை மொழியும் புத்திகள் தெரிந்து நான்உனை
நிகர் சந்தத்தமிழ் சொரிந்து பாடவும்அருள் தாராய்.

முகைமலர்ந்து, தேனைப்பெருக்கி, கதிரோனை வரவேற்கும் கமலம் போல், முகமலர்ந்து ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கி, அப்பெரியாரை வரவேற்றனர். அடியார் கூட்டத்தார் அளவற்ற அருளினால், அனைவர்க்கும் அம்மையும், அப்பனும் போல் விளங்கும் அவரைக் கண்டவுடன், அடியார்கள் அனைவரும் செயலற்றுச் சிறு குழந்தைகள் போல், தன்னை மறந்து ஆடிப்பாடிய விந்தையை என்னவென்று சொல்வேன். நேரில் பார்த்தவருக்கே, உண்மை விளங்கும். விண்மீன்கள் சூழ வான வீதியில் ஊர்ந்து வரும் நிறைமதியைப் போல், தலைவராகிய திருப்புகழ் மணியவர்களும், ஆயிரக்கணக்கான அடியார்கள் சூழ வீதிவலம், வந்தார். முருக நாமம் முழங்க அருணகிரியார் படம் யானை வாகனத்தின் மீது திரு வீதி வலம் வந்தது. அனைவரும் ஆனந்தத்திலும் அடியார்கள் அமைதியிலும் ஆழ்ந்திருந்தனர். வேல் முருகாவென்ற ஒலி வானைப் பிளந்தது. தன்னை மறந்து ஆடிக்கொண்டே சென்றவர் சிலர். பரவசத்தினால் தாம் பெண்ணென்பதையும் மறந்து கைகளைத் தலைமேல் தூக்கித்தாளம் போட்ட மாதரார் சிலர். வீதிகளில் சென்ற மசகற்ற வண்டிகள் கூட முருகா முருகாவென்று ஒலமிடுவது போல் தோன்றியது. வாயைத் திறந்து முருகாவென்றால், பெருமையும் பாவமும் குறைந்து விடுமோவென்று நினைத்து, வாசலில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பெரிய மனிதர்கள்கூடப் பரவசமாகி முருகாவென்று அலறினர். மனவழுக்கு நீங்கிய இத்தொண்டர்கள் என்னை விட ஒளி பெற்று விளங்குகின்றாரே, நாம் மாத்திரம், இம்மேகக் கூட்டங்களில் மறைந்து கிடப்பதாவென்று, பகலவனும், முகில் திரையைச் சடாலென்று பிளந்துகொண்டு அவர்

வஞ்சகயிலை சுற்றி வந்திடு பதத்தை
வந்தனைசெய் புத்தி தருவாயே.

களுடன் சேர்ந்துகொண்டவன்போல், வான வீதியில் தொடர்ந்து வந்தான்.

இடையில் நடந்த அதிசயத்தை என்னென்பது; பரட்டைத்தலையும், அழுக்குத்துணியுமாய் ரிக்ஷா இழுப் போனைப்போல் காணப்பட்ட ஒருவன் கூட்டத்தினிடை யில் புகுந்தோடி வந்து, திருப்புகழ் மணியவர்களின் திருவடிகளில் விழுந்து, பிறகு எழுந்து அவர் அணிந் திருந்த மாலையினின்றும் உதிர்ந்த ரோஜா இதழ்களைப் பொறுக்கிக் கண்களில் ஒற்றிக் கொண்டான். அவன் நிலையைக்கண்ட அப்பெரியாருக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. திடீரென்று தன் கழுத்திலிருந்த ரோஜா மாலையைக் கழற்றி அவன் கழுத்தில் சூட்டி அவனை அணைத்துக்கொண்டார். அந்நாளில், இராமன் அழுக்கு டையுடனிருந்த, குகனைத் தம்பியென்று தழுவிக்கொண்ட காட்சியை, இன்னுள் இங்கு நேரே கண்டு ஆனந்தித் தோம். பிறகு அவன் அவரை வணங்கி முன்னுல் சற்று தூரத்தில் நின்று முருகா முருகாவென்று கூவியபடியே தலைமேல் கை கூப்பி வணங்கி விட்டுச் சென்றுன். அவன் யார்? மனிதனு, முருகனு?

சிறிது நேரத்தில் திருக்கூட்டம் பூக்கடைக் கோயிலை அடைந்தது. வேல், வேல், வேல், வெற்றி வேல் வேல் வேல், என்று சொல்லிக்கொண்டே அடியார்கள் நுழைந்தனர். அன்றுதான்! திருப்புகழ்மணி, என்று பெயர் பொறித்துத் தொண்டர் கூட்டத்தாரால் கட்டப் பட்ட மணியும், ஓம் ஓம் என்று ஒலிக்க, தீபாராதனை நடந்த பின் முறைப்படி வலம் வந்து, அநுபூதி மண்டபத் தில் வீற்றிருக்கும் பிரமராம்பாளைத் தரிசித்துக்கொண்டு

அமுத மந்திர ஞானேபதேசமும் அருளி அன்புறவே
முருகாவென அருள்புகுந்திடவே கழலார் கழல் அருள்வாயே

திருப்புகழ் மணி அவர்கள் பேசும் மேடையில் வந்தமர்ந் தார்கள். முறையே ஐம்பத்தோறு அநுபூதிகளையும் இராகமாலிகையாய்ப்பாடி, அதற்குச் சுருக்கமாகவும், தெளிவாகவும் பொருள் கூறினர். திடீரென்று பெண்கள் கூட்டத்தினின்றும், அம்மையார் ஒருவர் எழுந்து முருகா முருகாவென்று சற்று நேரம் ஆவேசத்துடன் நின்று ஆடி அமர்ந்தார்.

மங்கள வாழ்த்துடன் அநுபூதியும் முடிந்தது. பெற்ற தாயினும் பரிவுடன், சொல்லமுதத்தையூட்டி மகிழ்வித்த அப்பெரியார்க்குத் தங்கள் அன்புப் பெருக்கைப்பல பரிசுகள் மூலம் வெளிப்படுத்தவேண்டுமென்று அவ்வடியார்கள் கேட்டுக்கொண்டனராம். "தனக்கென வாழாப் பிறர்க்குரியாராகிய, அப்பெருந்தகையார் அதற்கு இணங்காததால் தங்கள் அன்புப்பெருக்கை பழங்கள் மாலைகள் மூலமாக வெளிப்படுத்தினர் அத்தொண்டர்கள். மேலும் கவிஞர் ஒருவரால் கந்தரனுபூதி நடையில் அமைக்கப் பெற்றப் பாராட்டுப்பாக்களை திரு. இளவழகனார் அவர்கள் படித்து விளக்கினர். அப்பொழுது அவர் "தாய் மணியே, மாமணியே, கண்மணியே, என்று படித்து இதற்குமேல் கூறுவதற்கு ஒரு மணியுமில்லையே; என் ஆர்வமும் இத்துடன் அடங்கினபாடில்லையே", என்று, கூறி, "கிருட்டினசாமியெனும் மறையோய்! நீர் அடியார் திருக்கூட்டத்துடன் அப்பரெனப் பொலிவுற்று வாழ வேண்டும்" என்று முடித்தார்.

பிறகு ரசிகமணி சிதம்பரநாத முதலியார், திரு. ரா. பி. சேதுப் பிள்ளையவர்கள், சிறிது நேரம் சொற்பொழிவாற்றி ஆனந்தப் பெருக்கை வெளியிட்டார்கள். அந்

சிவசிவ என்று தெளிவுற நெஞ்சு
திகழ நடஞ்செய் கழல் தாராய்.

நிகழ்ச்சியைக் கண்ட பேதையென் மனத்திலும் கீழ் கண்ட பாடல்கள் தோன்றின.

"எந்தாய்! எமக்கிறையே! எளியோர்க்கு நல்லுறவே!
கந்தா விளக்கனையோய்! நானிலத்து நாயகமே!
நொந்தார் முகங்களெல்லாம் புண்ணியநின் முகங்கண்டு
செந்தாமரை போல் திகழ்ந்ததொரு விந்தையென்னே?

அப்பா! அருட்கடலே! அல்லும் பகலும் உந்தன்
துப்பார் நல்லுள்ள மதில் தோன்றிக்கனிந்துவரும்
சொல்லார் அமுதமெனும் அநுபூதி மொழிகேட்டு
கல்லான தூண்களெல்லாம் பெண்ணான காட்சி யென்னே?

தவராஜ சிங்கமே! தரணியில் என்னாளும் வாழ்க வாழ்க;
புவி போற்றும் புங்கவா! நலிவின்றி நானிலத்தில் வாழ்க,
வாழ்க குறையற்றகோவே! நீர் குவலயத்தில்
[நிலை பெற்று வாழ்க வாழ்க
மறை போற்றும் மன்னவா! மானிலத்தில்
மாண்புற்று வாழ்க."

ஔவைப் பிராட்டியார்

(ஸ்ரீ வத்ஸன்)

ஞான யோக மார்க்கங்களில் ஔவைப்பிராட்டியார் தேர்ச்சி பெற்றவர் என்றும், அத்துடன் வைத்தியமும் மற்றைய யோகி யரைப்போல் அறிந்துளர் என்பதற்குச் சில சான்றுகளும் முன்பு கூறினோம். தொடர்ந்து மேலும் அவர்பாடியுள்ள செய்யுட்களில் மூதுரை என்ற தலைப்பிலடங்கிய முதற் செய்யுளின் கருத்தைச் சற்று கவனிப்போம்.

கருப்பெருங் கடலது கடக்கவுன் திருவடிகளை
த்தரும் திருவுளம் இனியாமோ.

மூதுரை: மூதறிவனுகிய இறைவன், அவரைப்பற்றிய அறிவு மூதறிவு. அதை நமக்குப் புகட்டவந்த மூதறிஞர் மூதாட்டியாகிய ஒளவைபிராட்டியார். அவரால் எவருக்கும் அறிவைப் பெருக்கும் உரையாகக் கூறப்பட்டது மூதுரை. இவற்றிலடங்கிய சொற்கள் ஆழ்ந்த கருத்துக்கள் கொண்டவை. பக்குவிகட்கு அவரவரது நிலைக்குத் தக்கவாறு உண்மையை விளக்குவது

"வாக்குண்டாம், நல்லமனமுண்டாம், மாமலராள் நோக்
குண்டாம் மேனி நுடங்காது, பூக் கொண்டு துப்பார்
திருமேனி, தும்பிக்கையான் பாதம் தப்பாமற் சார்வார்
தமக்கு"

நூல உரை : புட்பங்களைக் கொண்டு, பவழமேனி படைத்த விநாயக பெருமானின் பாதங்களைத் தப்பாமல் அருச்சித்துப் பணிவார்கட்கு (1) வாக்குண்டாம், (2) நல்ல மனமுண்டாம், (3) இலக்குமி கடாட்சம் உண்டாகும், (4) சரீரம் வாடாது. என்றவாறு

விளக்கம்;—பூ என்பது எல்லாவித புட்பங்களைக் குறித்தாலும் முக்கியமாகத் தாமரைப்புஷ்பத்தையே குறிக்கும். கதிரவனைக் கண்டபின்பே மலரும் பூ அது. இரவில் சந்திரனைக்கண்டால் மலரும் பூ அல்லி. இராக்காலம் பூசைக்கு உகந்தது அல்லி. ஆகவே உதயத்தில் பூசைக்குறிய புஷ்பம் அப்போதே மலர்ந்த பூ வாகிய தாமரை என்று கருத்து.

துப்பார் திருமேனி :—

செம்பொனுபுர கைலை, அதன் நாதன் பரமசிவம் அவர் பொன்னவர். அவரது குமாரரின் மேனி பவழநிறம் என்கிறார் ஒளவைப் பிராட்டியார். மேலும் யோகிகட்கும் ஞானிகட்கும் அவரது சரீரம் பிறவியில் எந்நிறமாயிருப்பினும் வாசியோகம் வாய்த்த

வாலரவிக்கிரணங்களாம் எனவுற்றபதங்கள்
மாயைத் தொலைத்திட உன்றன் அருள்தாராய்.

பின்பு அவர்களது உடலும் பொன்னிறமாக மாறும் என்று ஞான நூல்கள் கூறுகின்றன. இதற்கு ஓர் சான்றாக சமீபத்தில் தெனாலியையடுத்து ஓர் கிராமத்தில் கருநிறம் படைத்த ஒருவர் தாரம் அப்பியசித்து வரும்யோகத்தின் காரணமாக தமது கருநிற மேனி மாநிற மாகிய பவழநிறமாக மாறியுள்ளது என்ற பத்திரிகைச் செய்தியிலிருந்தும் தெரிகிறது.

தும்பிக்கையான் :—

சீவராசிகளில் அதிக ஆயுள் படைத்தது யானை. மற்ற எல்லா சீவன்களைப்பார்க்கிலும் இதற்கு அதிகப்படியாக உள்ள உருபு துதிக்கை. இதற்கு இதுவே நாசி. ஆகவே பெருநாசி படைத்தது இது. சுவாசம் உள்ளே தங்கினால் சீவன் இருக்கிறது, அதாவது உயிர் இருக்கிறது என்கிறோம். அத்தகைய சுவாசத்தைத் பெருத்த அளவில் வெகுநேரம் வெளிவிடாமல் அடக்கி வைத்துக் கொள்ள பெருநாசி படைத்த மிருகம் யானை. விநாயகப்பெருமானே வெனில் முதற் கடவுளாகத் தோன்றி சிரஞ்சீவியாக என்றென்றும் விளங்குகிறார். ஆனது பற்றியே இவரை யானைத்தலைவன் என்றும் யானையைப்போல் துதிக்கை அதாவது பெருத்த நாசியைப் படைத்தவன் என்றும் தும்பிக்கையான் என்றும் வணங்கி வரலாயிற்று.

பாதம் சார்வார் தமக்கு :—

பாதங்களில் பணிதலே பணிதல் ஆகும், அத்தகைய வணக்கமே மங்களத்தைக்கொடுக்கும். இதற்கு ஓர் சான்று. காந்தச் சட்டங்கட்கு தலைப்புறம் வடதுருவம் என்றும், அடிப்புறம் தென்துருவம் என்றும் கூறுகிறோம். ஒரே விதமான துருவங்கள் ஒன்றை ஒன்று ஐக்கியம் கொள்ளாது தகர்த்துத்தள்ளும் (In magnetic Rods Like Poles repel & unlike Poles attract). அதே

ஒங்கும் ஐம்புலனோட நினைத்தின் பயர் வேனை
ஓம் பெறும் ப்ராணவாதியுரைத்து எந்தையான் வாய்.

போல் இம்மானுட சரீரம் ஓர் காந்தக்கம்பி. சிரம் வடதுருவம், பாதம் தென்துருவம். ஒருவரை யொருவர் ஆத்மார்த்தமாக வணங்கி ஒருவரது சக்தியும் ஆசியும் மற்றவர் அடையவேண்டுமானால் ஒரு வடதுருவம் அதாவது ஒருவரது சிரம், மற்றவரது தென் துருவமாகிய பாதத்தில் படல் வேண்டும். இந்த உண்மையைப் போதிக்கவே பாதங்களில் பணியுங்கள் என்று பிராட்டியார் கூறியுள்ளார். மற்ற விதமான பணிவுகள் அல்லது வணக்கங்கள் அதாவது மார் போடணைத்தல், கைகுலுக்குதல் முதலியவைகள் ஒருவர்மாட்டுள்ள பிரியத்தைக் குறிக்குமேயன்றி ஒருவரது சக்தியை (WILL POWER, Magnetic Power) மற்றொருவர் அடைய வேண்டி வணங்கும் முறையல்ல. மேலும் சித்தர்கள் சிஷ்ய வர்க்கங்கட்கு புத்தி புகட்டும்போது,

"மகத்தான சித்தரை நீ கண்டயானால்
பணிந்திடுவாய் அவர் பாதம் சிரசுதட்ட"

(அகத்தியர் பூரணசூத்திரம்)

என்று தெளிவுபடக் கூறியிருக்கிறார்கள்.

இந்தக்கருத்தை உட்கொண்டே நமது வைணவ ஆலயங்களில் பகவானின் பாதத்தை (சடாரியை) பக்தர்கள் சிரசில் படும்படி சாதித்து வருகிறார்கள். அதாவது சர்வலோக சரணியனும் சரணமடைந்தவரைக்காக்கும் ஸ்ரீமந் நாராயணன் தனது பொன்னடிகளாலன்றோ சரணமடைந்தவரைக்காக்கிறார். ஸ்ரீஇராமபிரானது பொன்னடிகளைப் பெற்றுப் போனார் நம் பரதாழ்வார் ஓர் இராஜ்யத்தை நடத்த. இவ்வண்ணமாக வணங்கும் ஒருவர்க்குக் கிடைக்கும் லாபம் என்னவெனில், வாக்குண்டாம் நல்லவாக்கு வன்மையைப் பெறுவார். மனமுண்டாம். மனமானது செம்மையையடையும், மாமலராள் நோக்குண்டாம், மேற்கூறிய இரண்டும் வந்தபின்பு, தானே திருவும் வந்தெய்தும். மேனி நுடங்

கோப மற்று, மற்றும் அந்த மோகமற்று, உனைப்பணிந்து
கூடுதற்கு முத்தி யென்று தருவாயே.

காது. இம்மூன்றும் பெற்றவர்கள் சரீரம் நடங்காது; நரை திரையை அடையாது என்றவாறு.

பன்னிரு திருமுறைகளில் இயற்கை நயங்கள்

(க. சோமசுந்தர செட்டியார்)

ஒருநாள் ஆதிசேஷனுக்கும் வாயுதேவனுக்கும் யார் பலசாலி என்ற ஓர் வாதம் ஏற்பட்டது. இதனைத் தீர்மானிக்க எண்ணிய இவ்விருவரும் மேருமலையை ஆதிசேஷன் நன்றாக இருக்கிச் சுற்றிக் கொண்டு தம் படத்தால் சிகரத்தையும் மூடிக்கொண்டான். வாயு தன் முழுப்பலத்தையுங் கொண்டு மேருவையசைத்துப்பார்த்தான். முடியவில்லை. மேலும் அசைத்தான். அப்பொழுது அம்மலையின் சிகரங்கள் மூன்று துண்டுகளாகப்பிளந்து ஆகாயத்தில் பறந்து ஒருசிகரம் திருச்சிராப்பள்ளியிலும், ஒன்று திருக்காளத்தியிலும் மற்றொன்று இலங்கைத் தீவிலுள்ள திரிகோணமலையிலும் விழுந்தன. எனவே இவை மூன்றும் தக்ஷிணகைலாயம் ஆயின என்று வழங்குவர் ஆன்றோர். இத்தகைய தக்ஷிணகைலாய மெனப்படும் திருக்காளத்தி என்னும் திவ்யதலம் நம் தமிழ் நாட்டிலுள்ளது. தமிழ் நாட்டிற்கு வட எல்லையாக அமர்ந்துள்ள திருவேங்கடத்தின் சமீபத்திலுள்ளது. நான்கு சமயாசாரிய மூர்த்திகளாகிய அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் என்னும் நால்வர் பெருமக்களாலும் பாராட்டப் பெற்ற கண்ணப்ப நாயனர் திருவவதாரஞ் செய்த தலம் ஆகும். இதுமட்டுமோ? ஆதிசங்கரபகவத்பாதாசார்யாளும் சிவானந்த லஹரியில் கண்ணப்ப நாயனரைப் பாராட்டியுள்ளார். சங்கப்புலவர்களான நக்கீரர், பாணர், கல்லாடனர் முதலிய பெரியார்களும் இந்நாயனரைப் பாராட்டியுள்ளார்கள். இனி,

---

எமபடரை மோது மோனவுரையில் உபதேச வாளை
எனது பகைதீர நீயும் அருள்வாயே.

முற்றத்துறந்த பட்டினத்தடிகளாலும் "நாளாறுதன்னில் கண்ணி டந்தப்பவல்லேனல்லன்" என்று பாராட்டப்பெற்றவர் நம் கண்ணப்பர். இவர்தம் வரலாற்றைத் தெய்வப் புலவர் சேக்கிழார் பெருமான் அருமையான தமிழ்ப் பாக்களில் தம் பெரிய புராணத்தில் 186 செய்யுட்களால் சித்திரித்துள்ளார்கள் என்றால் கண்ணப்பர் பெருமையை நம்மால் பாராட்ட முடியுமா?

இவர் அனுக்ரகம் பெற்ற காளத்தி மலையில் கண்ட இயற்கைக் காட்சியைச் சேக்கிழார் பெருமான் நமக்குப் பின்வருமாறு அழகு படக்காட்டியுள்ளதைக் கண்டு மகிழ்வோமாக!

காளத்தி மலையில் எங்கு பார்த்தாலும் சோதி மரங்கள் நிறைந்திருந்தன. இம்மரங்கள் இரவில் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கும் அக்னிபோல விளங்கும். சதுப்பு நிலங்களிலுள்ள கந்தகமும் இரவில் எரிந்து விளங்கும். [இதனை ஆங்கிலத்தில் Will-O-the-Wisp அல்லது கொள்ளி வாய்ப்பேய் என்பர்]. இதனால் அம் மலையில் இரவிலும் வெளிச்சம் நிறைந்திருந்தது. காட்டிலும் மலைகளிலும் வசிக்கும் குரங்குகள் தம் குட்டிகளுக்கு இருட்டில் வெளிச்சம் தெரியும் பொருட்டு (Torch light போல்) பாம்பின் நாகரத்னங்களைத் தாம் வாழும் மரக்கிளைகளில் வைத்துக் கொண்டிருக்கும். இதனால் காளத்தி மலையில் இரவே தெரியாமல் ஒளி வீசிக் கொண்டிருக்கும். இதுமட்டுமோ? ஐம்புலன்களையும் அடக்கி ஆறுபகைகளையும் போக்கி வாழும் முனிவர்கள் பலர் அம்மலையில் தவஞ்செய்து கொண்டிருந்தனர். அவர்செய்யும் யோகபலத்தில் அவர் உடம்பின் பக்கமெல்லாம் ஒரு விதமான ஜோதி விளங்கிக் கொண்டிருந்தது. இதுவும் காளத்தி மலைக்கு இரவை மறைத்து ஒளியைக் கொடுத்து விளங்கியது. இரவில் இத்தகைய காட்சிகளால் இரவு என்பதே தெரியாமல் ஜோதி மயமாகக் காளத்திமலை பகல்போல பிரகாசித்துக் கொண்டிருந்தது என்கிறார்.

படிமன துனது பரிபுர சரண
பாதார விந்த நினையாதோ.

என்னே இயற்கையின் அழகு? அதைப்பார்க்கிலும் அதனையெடுத்து விவகரிக்கும் சேக்கிழார் பெருமான் ஆற்றலே ஆற்றல். இனிச் செய்யுள்வருமாறு :—

(கண்ணப்ப நாயனார் புராணம் 131-வது பாட்டு)

செந்தழல் ஒளியிற்பொங்கும் தீப மாமரங்களாலும்
மந்திகள் முழையில் வைத்த மணிவிளக்கொளிகளாலும்
ஐந்தும் ஆ றடக்கியுள்ளார் அரும் பெருஞ்சோதியாலும்
எந்தையார் திருக்காளத்தி மலையினில் இரவொன்றில்லை.

—தொடரும்

ஒளவைப் பிராட்டியார்

(சீதாராம்)

கலைமகளும் திருமகளும்

கல்விச் செல்வமும் பொருட் செல்வமும் ஒருங்கே அமையப் பெறுவது இயற்கையல்ல வென்னும், ஓர் வழக்கச்சொல்லை நாம் கேட்டிருக்கிறோம். ஒளவைப் பிராட்டியார் ஓர் சிறந்த கவியே யாயினும் கூழுக்கும் கவி பாடக்கூடியவர் ஆதலால் வறுமையால் பீடிக்கப்பட்டிருக்கக்கூடும் என்பதற்குச் சான்றாக "காசுக்குக் கம்பன் கூழுக்கு ஒளவை" என்னும் வசனத்தையும் சிலர் எடுத்துக் காட்டுகின்றனர்.

நாமகளும் திருமகளும் ஒருங்கேயமையார்கள் என்பது ஆன்றோர் வாக்கல்ல. இருப்பின், "மன்னனுக்குத் தன் தேசம் அல்லால் சிறப்பில்லை, கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம்

வேதாமைத்துனவேளே வீரா சற்குணசீலா
மாதானத் தனமாக மானானக் கழல் தாராய்.

சிறப்பு" என்று கூறியதின் கருத்துத்தான் யாது? சிறப்பின் பெருமை வறுமையோ? இல்லை. ஆனால் கற்றவர் எவர்? மாசறக்கற்று மாசற்றவனைப் பற்றிக் கவி பாடும் வன்மை படைத்தவரே கற்றோர் ஆதல்வேண்டும். அவ்வண்ணத்தவரே எங்கு சென்றாலும் சிறப்பை யடைவர். ஏனைய பரமனைப் பற்றிப்பாட அறியாத, ஆனால் நகை (விகடச்சொற்கள்), இன்பம் (சிருங்கார காதற் சொற்கள்), வீரம் (தோல்வலிவைப்பற்றிய சொற்கள், சாந்தம் (பொறுமையைப் புகட்டும் சொற்கள்), குற்றை (இழிவு, தூஷணைச் சொற்கள்) அற்புதம் (ஆச்சரியப் படத்தக்க சொற்கள்) பயம் கோபம் (கோபத்தைக் காட்டிப் பயத்தை ஏற்படுத்தும் சொற்கள்) முதலிய, மனித வர்க்கத்தினரைக் கவரக்கூடிய, சொற்கள் அடங்கிய கவிகளைப் பாடுபவர் எங்கு சென்றாலும் சிறப்பை அடைவரோ அடையார். வேதநாயகம் பிள்ளையவர்கள் கூறியதுபோல. வெறுப்பும், விருப்பும் கொண்ட வரவேற்பு, நன்கொடை அளித்தாலன்றி நீங்காத வறுமை சூழ்ந்தவராகயிருப்பர். அவர்கள் இலக்கணக்கவி பாடினாலும் ஏழ்மைத் தன்மை நீங்கப் பெறுவதில்லை. ஆகவே மேலே கூறியுள்ள வழக்கச்சொல் இவர்களை ஒருக்கால் சாருமேயன்றி, ஓர் ஞானக்குறள்பாடிய முதிர்ந்த ஞானியும் யோகியுமாகிய நமது ஔவைப் பிராட்டியாருக்குப் பொருந்துமோ? பொருந்தா. ஆனால் இங்கு கூறியுள்ள கூழுக்கு ஔவை என்னும் சொற்களிலிருந்து, ஒருபோது ஓர் கவனம் அன்னமிட்ட ஒருவருக்கும் இனிதையே செய்யும் குணம் வாயத்தவர் நமது பிராட்டியார் என்பதை அறிகிறோம். அஃது அவரது உயர்ந்த மனோ நிலையைக் குறிக்குமே யன்றி வறுமை மேலீட்டால் பசியினால் வாடி அதைப் போக்கப் பாடியதாகக் கொள்ளல் தகாது.

திருவீழிமிழலையில் ஸ்ரீ ஞான சம்பந்தப் பெருமானும் ஸ்ரீ அப்பரும் பரமனிடம் படிக்காசு பெற்றதினால் அவர்கள் வறுமை சூழ்ந்தவர்கள் என்று அனுமானித்தல் முறையாகுமா? ஆகாது.

உலகப் புகழ்ப் புலம்பு கலியற்றுணர்ச்சி கொண்டு
உன் உரிமைப் புகழ் பகர்ந்து திரிவேனோ

தவிர ஞானிகளே வறுமையைக் கண்டிக்கிறார்கள்.

"பிச்சை யென்று ஒன்றுங் கொள்ளாதே-சிவன்
இச்சைகொண்டவ்வழி ஏறி மீளாதே (கடுவெளி சித்தர்)
புல்லரிடம் போய் பல்லை மிகக்காட்டாமல் என் கண்ணம்மா!
பொருள் எனக்குத் தாராயோ (குதம்பை சித்தர்)
வறுமை என் வரும் வாதிகாண் உங்கட்கு (அகத்தியர்)

என்பதிலிருந்தும் ஞானிகட்கு அதாவது கலையில் உன்னத கலை யாகிய பரமனைப்பற்றிய அறிவையடைந்தவர்கள், அதைப் பாடும் மாசற்றகவிகட்கு வறுமை ஒருநாளும் இல்லை. மனத்தகத்தழுக் கறுத்த மௌன ஞான யோகிகட்கு தானே திருவந்தெய்தும், அதாவது இலக்குமி கடாட்சம் தானாகவேவந்து சேரும் என்று சிவவாக்கியரும் கூறியுள்ளார்.

ஆகவே ஔவைப் பிராட்டியார் ஓர் மாசற்ற கவிமணியென்றும் அவரை வறுமை பீடித்ததில்லை என்றும் நிச்சயமாய்க் கூறலா மன்றோ?

அப்பர் தேவாரம்

தேடிச் சென்று திருந்தடி யேத்துமின்
நாடி வந்தவர் நம்மையும் ஆட்கொள்வார்
ஆடிப்பாடி அண்ணாமலை கைதொழ
ஓடிப்போம் நமதுள்ள வினைகளே.

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் அருளிய
நவவீரர் நவரத்தினக் கவி விருத்தம்

உரையாசிரியர் :—

திருப்புகழ்சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை B.A., B.T.,

அடியார்கள் பாராயணஞ் செய்து நவக்கிரகக் கோளாறுகளை நீக்கக் கூடும். 54, பந்தர் வீதி, சென்னை.

விலை $2\frac{1}{2}$ அணா

உன் கமலப் பதகாடி உருகி உளத்தமுதூற
உனது திருப்புகழ் ஓத அருள்வாயே.

ஆயுர்வேத வித்வான் B.V. பண்டிட்ஸ்
'சத்வைத்யசாலெ' நஞ்சன்கூடு

I.D.L.21 ஸ்வாஸ்கோ இருமல், காசம் சுவாச வியாதிக்கு
I.D.L.72 ஹார்டோன் ஹிருதய வலி, மயக்கம், துடிப்புக்கு
I.D.L.75 டீப்சன் ஜீரண உபாதைக்கு
I.D.L.99 ஜ்வரேக் எவ்வித ஜ்வரங்களுக்கும்

மாதர்களுக்கு
I.D.L.71 ப்ரிமெலெக்ஸ் ரக்த, பல விருத்திக்கு
I.D.L.97 ஹிஸ்மெனு பலஹீனம் மயக்கத்திற்கு
I.D.L.81 ப்ரதமென்ஸ் ருதுக உபாதைக்கு
I.D.L.91 யூடிரூல் கெர்ப்பாசய டானிக்
I.D.L.96 டோனடெல் ஜீர்ண விருத்திக்கு

I.D.L.12 காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
I.D.L.18 கர்ஜன் கோரோஜனை மாத்திரை
I.D.L.15 பாலக்ஸ் பேதியாக மாத்திரை
I.D.L.31 சிசுராக் ஜீர்ண டானிக்

அவசிய தின உதவிகள்
"நஞ்சன்கூடு பல்பொடி" I.D.L.61 (மெடிகேடட்)
பயோரியா, மற்ற பல் உபாதைகளுக்கு
I.D.L.78 கூலெக்ஸ் உஷ்ண, சமன தைலம்
I.D.L.55 ஜிஞ்சிப் அஜீர்ண, பித்த சமனி
'யூனிகான்' சுத்த தேன்

தபால் சில்லையும், தங்கள் விலாசமுமுள்ள கவருடன் வியாதி விபரம் எழுதி, எங்கள் ... தபால்மூலம் சிகிச்சை பெறவும்

ஸோல் ஏஜெண்டுகள்
யுனைடெட் கன்ஸர்ன்
54. பந்தர் தெரு :: மதராஸ்.1

287

நெஞ்சகமே கோயில்,
நினைவே சுகந்தம், அன்பே
மஞ்சனீர், பூசை கொள்ள
வாராய் பராபரமே.

(தாயுமானவர்)

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
ஊதுபத்தி
நெ. 1506

Reg. No. M. 5390 288

ஷண்முகம் பிராண்டு

ஸ்டீல் டிரங்கு & சூட் கேஸ்கள்

நூதன முறைகளில் நீடித்த
உழைப்பிற்காக
உறுதியானதும் உத்திர
வாதமுமான சரக்குகள்.

சி. ஞானசுந்தர நாயகர்

341, எஸ்பிளனேட், சென்னை-1.
ஷோரூம்: 1-14, பேக்கர் தெரு,
சென்னை-1.

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்புபெற்ற
நகை வியாபாரிகள்

"ஸ்வர்ண மாளிகை"

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.,

தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூல வீதி, - மதுரை.

TEL:—"FAITH" ESTD:—1924. PHONE:—113

நீங்கள் விரும்பக்கூடிய உயர்ந்த
உண்மையான ரகங்கள், பல
வகை பட்டு, நூல் ஆடை
களுக்கு கியாதிபெற்ற
நம்பிக்கையான
இடம்

கருப்பண்ண முதலியார் ஸ்டோர்ஸ்

பட்டு அண்டு கைத்தறி ஜவுளி வியாபாரம்

53, கிடங்கு தெரு, மதராஸ்-1.

Printed by T. Iyaswamy, Manager Haddon & Co.,
49, Badrian St., Madras 1. Phone No. 55044
Edited & Published by S. Muthuswamy, 54, Bunder St., Madras